
# தமிழ் மரபில் பெண் படைப்பாளர்களும் பெண் எழுத்தும்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)



பதிப்பாசிரியர்கள்

திருமதி. இரா.விஜயலட்சுமி

திருமதி. ப.ஈஸ்வரி

திருமதி. கு.அன்பரசி

## காரைக்கால் அம்மையாரின் படைப்புக்களால் தென்னிந்திய இசையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

சி. சூரியகுமார்,
முதுநிலை விரிவுரையாளர் (இசைத்துறை),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
கைபேசி: (0094)772100972
மின்னஞ்சல்: suriyaskn@gmail.com

**முகவுரை.**

தென்னிந்திய இசை மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டதாகும். இவ்விசை பண்டைக்காலம் முதல் இன்று வரை அதன் வளர்ச்சிப்போக்கு தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற இவ்விசையினை இன்றுவரை அழியவிடாது பாதுகாத்த பெருமை நமது பக்தி இலக்கியங்களையே சேரும். அதிலும் குறிப்பாக பல்லவர் காலத்து பக்தி இலக்கியங்களைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவனைப் பாடு பொருளாகக் கொண்டு இசையால் வழிபட்டனர். அந்தவகையில் நாயன்மார்களுக்கும், ஆழ்வார்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவார் காரைக்;கால் அம்மையாராவர். அவரின் படைப்புக்களும், அவர் பாடிய பண்களும் தமிழிசை வரலாற்றில் மிகவும் சிறப்புவாய்ந்ததாக அமைந்தது.

**கரைக்கால் அம்மையார்.**

தமிழிசையின் தாய் என்று போற்றப்படுகின்ற காரைக்கால் அம்மையார் தேவார மூவருக்கும் முற்பட்டவர் என்பர். கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்று கூறுவர். இவர் காரைக்கால் என்னும் ஊரில் தனதத்தர் என்னும் வணிகரின் மகளாகப் பிறந்து நாகபட்டிணத்தில் வாழ்ந்த பரமதத்தன் என்னும் வணிகரை மணந்துகொண்டார். என்றாலும் மாம்பழம் வழங்கிய ஒரு நிகழ்ச்சியின் விளைவாக இவர் கணவர் இவரைத் தெய்வப்பெண் என்று அஞ்சி இவரை விட்டு நீங்கி மதுரை சென்று வேறொரு பெண்ணை மணமுடித்துக் கொண்டார். இவரது இயற்பெயர் புனிதவதி என்பதாகும். பின்னர் காரைக்கால் அம்மையார் என்று அழைக்கப்பெற்றார். இவர் சிவபெருமானிடம் பேய் வடிவத்தை வேண்டிப் பெற்றார் என்பர்.1

சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகப் போற்றப்படும் அம்மையார் பிறந்து மொழி பயின்ற நாள் முதல் சிவ வழிபாட்டிலும் சிவனடியார் சேவையிலும் அன்பு கொண்டு வாழ்ந்தவர். சிவபெருமானின் திருக்கோலக் காட்சியை கண்ணாரக் கண்டு மகிழ விழைந்த அம்மையார் திருக்கையிலை மலைக்குத் தலையால் நடந்து சென்றார். அங்கு " அம்மையே" என்று இறைவன் அழைக்க "அப்பா" எனப் பணிந்த அம்மையார்.

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க"2

என்ற வரத்தை இறைவனிடம் வேண்டிப் பெற்றார். எம்பெருமான் தூக்கிய திருவடியின் கீழ் எப்பொழுதும் அமர்ந்திருக்கும் பேற்றினைப் பெற்ற அம்மையார் பிறவிப் பெரும் பயனை அடைந்தார். தமிழ் கூறும் நல்லுலகம் இவரைப் பேயார் என்றும், அமமையார் என்றும் போற்றி மகிழ்கின்றது. தமிழ் நாட்டில் ஏராளமான கோயில்களிலும் கேரளா, இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம் போன்ற கடல்கடந்த நாடுகளிலும் அம்மையாரது திருவுருவச் சிலைகள் இன்றும் உள்ளன.3

**படைப்புக்களின் சிறப்புக்கள்.**

தமிழிசையின் முன்னோடியாகப் போற்றப்படுகின்ற காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டில் இரண்டு மூத்த திருப்பதிகங்களைப் பாடியுள்ளார். இவற்றில் 11, 11 என்று 22 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் திரு இரட்டை மணிமாலை, (20 பாடல்களைக் கொண்டது) அற்புதத் திருவந்தாதி (101 பாடல்களைக் கொண்டது) தமிழிசை வரலாற்றில் முதன் முதலாகக் காரைக்கால் அம்மையார் 2 முக்கிய பண்களில் பாடியிருப்பதால் இவரை " தமிழிசையின் தாய்" என்றும் "தமிழிசையின் முன்னோடி" என்றும் அழைக்கின்றோம். இவர் பாடல்கள் இவருக்குச் சிவபெருமான் மீது இருக்கும் பேரன்பை வெளிப்படுத்துகின்றன. மேலும் சமயப் பகையில்லை, அரியும், அரனும் ஒன்று என்று கருதும்படியும் இவர் பாடியிருக்கின்றார். இவரது பாடல்கள் தேவாரத் திருமுறையில் 11ஆம் திருமுறையில் வைத்துத் தொகுக்கப்பட்டுள்ளது.4.

தென்னிந்திய இசை பன்னெடுங் காலமாக சிறந்த முறையில் வளர்ந்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. பாரம்பரியச் சிறப்புமிக்க எந்தவெரு கலையும் வரலாற்றில் அவ்வப்போது முன்னேற்றம், தேக்கம் அல்லது மாற்றங்கள் ஏற்படுவது மரபாகும். அவ்வாறு காலத்திற்கேற்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் கலையே நின்று நிலைக்கும். அந்தவகையில் காரைக்கால் அம்மையார் படைப்புக்கள் தென்னிந்திய இசை வரலாற்றில் ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்தியதை நாம் காணலாம். அவற்றில் சிலவற்றினைப் பின்வருமாறு நோக்கலாம்.

**பண்ணமைந்த பாடல்கள்.**

தமிழிசை வரலாற்றில் பல இலக்கண இலக்கியங்களில் பண்ணமைந்த பாடல்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பண என்பதற்கு அமைவு, இசைப்பாட்டு, ஊழியம், சீர், தகுதி, நிந்தை, நிறை, நரம்புள்ள வீணை என பொருள்கள் தமிழ் அகராதியில் உள்ளன. பண் என்பது பாடல்களில் அமைந்துள்ள இசையின் முறையாகும். ஒலி செம்மையான முறையில் ஒழுங்கான இசையமைப்புடன் பாடல்களில் ஒலி உருவமாக அமைவது பண் ஆகும். பண்கள் தமிழ் மக்கள் வாழ்வோடு மிகவும் நெருக்கமுடையன. சங்ககாலத்தில் இருந்தே பண்ணிசையும், பண்ணிசை வல்லவர்களும் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர் பாணர்கள் பண்பாடி அரசவையில் பரிசுகள் பெற்றனர்.5

||மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும் .........." (தொல் - பொருளதி; - அகத்திணை - 5)

தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தைய நூற்றாண்டுகளில் தமிழிசையோர் தமிழிசைப் பெரும் பண்களை நிலங்களின் அடிப்படையில் நான்கு என வகுத்தனர். அவற்றை ||யாழ்|| எனக் குறிப்பிட்டனர். யாழ் என்பது பெரும் பண்ணைக் குறிப்பது. அதாவது ஏறு இறங்கு நிரலில் ஏழு இசை நரம்புகளைக் கொண்ட தலைமைப் பண்ணைக் குறிப்பது. அவற்றை முல்லையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என்று பாணர்கள் பகுத்து வரிசையில் நிறுத்தினார்கள். பின்னர் யாழ்களைச் சங்க காலத்தவர்கள் பாலை என்று குறிப்பிட்டனர். தென்னிந்திய இசையில் தற்காலத்தில் இராகங்கள் என அழைக்கப்டுபவை பண்டைத்தமிழ மக்களால் பண்கள் என அழைக்கப்பட்டன.6

அவ்வாறே சங்க இலக்கியமாகிய புறநானூற்றுப் பாடல்கள் பண்களுடன் அமைக்கப் பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. ஆயினும் முதன் முதலில் பண்ணுடன் அமைந்த பாடலாகப் பாடும் சிறப்பினைப் பெற்றது இவரது திரு ஆலங்காட்டு மூத்த திருப்பதிகங்களாகும். இதில் நட்டபாடை, இந்தளம் ஆகிய இரு பண்களை அம்மையார் கையான்டுள்ளார். ஆலங்காட்டில் அனல் கையேந்தி அண்டமுற நிமிர்ந்து ஆடிய அப்பனின் ஆடலைக் கண்குளிரக் கண்ட பேரானந்தத்தில் நட்டபாடைப் பண்ணில் அம்மையார் பாடிய முதல் மூத்த திருப்பதிகம் இவ்வாறு தொடங்கக் காணலாம்.7

பண்: நட்டபாடை

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழுறவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்........(மூத்த திருப்பதிகம் 1. பாடல்.1)

நட்டபாடை என்கின்ற பண்ணிற்கு நிகரானதாகத் தற்காலத்தில் குறிப்பிடப்படுவது கம்பீரநாட்டை இராகமாகும். தமிழோடு இசை பாடிய நாயன்மாருள் அதிகமான பண்களில் தேவாரப் பதிகம் பாடியவர் திருஞான சம்மந்தராவார். கானத்தின் எழுபிறப்பு என்று சேக்கிழாரால் பாராட்டப்பெற்ற ஞானசம்பந்தப் பிள்ளையார் நுட்ப சுருதிகளைக் கொண்ட மேகராகக் குறிஞ்சி, செவ்வழி, வியாழக்குறிஞ்சி முதலிய பண்களில் தேவார இசை பாடினார். அம்மையார் பாடிய முதல் பாடலும் ஞானசம்பந்தர் பாடிய முதற் பண்ணும் ஒன்றேயாகும்;. இந்த இராகத்தில் அமைந்த பாடல்களைத் தற்கால இசைக் கச்சேரிகளில் பாடப்படுவதனைக் காணலாம். மேலும் இவ் இராகத்தில் ஏராளமான வினாயகர் பாடல்கள் காணப்படுகின்றது. இதனைக் கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடுவதால் கச்சேரி களை கட்டி சிறப்புப் பெறுவதனைக் காணலாம்.

அம்மையார் பாடிய நட்டபாடைப் பண் தென்னிந்திய செவ்விசையில் மட்டுமல்லாது நாட்டுப்புற இசை மற்றும் திரையிசையிலும் கையாளப்பட்டுள்ளது. செவ்விசையில் சான்றாக. ஞானவினாயகனே சரணம் – ஆதி அவ்வாறே திரையிசைல் சான்றாக. என்னவளே அடி என்னவளே – காதலன். இவை போன்ற ஏராளமான பாடல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சிறப்பான இராகத்தினை முதல் பாடலாகப் பாடி ஆரம்பித்துவைத்த பெருமை அம்மையாரையே சாரும்.

காரைக்கால் அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் அமைந்த பதிகம் இரண்டாவது மூத்த திருப்பதிகமாக அமைந்துள்ளது.

பண்: இந்தளம்.

எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்...
(மூத்த திருப்பதிகம் 2. படல் 1)

இந்தளம் பண்ணிற்கு இணையான இராகமாகக் கொள்ளப்படுவது தற்கால மாயா மாளவ கௌளை இராகமாகும். இந்த இராகத்தின் சிறப்புக்கள் எண்ணிலடங்காதவை. மாயா என்றால் கண்ணால் காண முடியாத, மாளவம் என்றால் அதிகாலை நேரத்தில், கௌளை என்றால் பாடுவது என்னும் வகையில் கண்ணால் காணமுடியாத இசையை அதிகாலை நேரத்தில் எழுந்து பயிற்சி செய்யவேண்டும் என்று பொருள் தருகின்றது. இது தாய் இராகப் பட்டியலில் 15வது இராகமாகக் காணப்படுகின்றது. பல சேய் இராகங்களையுடைய இவ் இராகமானது கருணை, பக்தி ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்த வல்லதாகும்.8

அம்மையார் பாடிய இப்பண்ணிலேயே சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது முதல் பாடலாகிய “பித்தாப் பிறை சூடி........” என்ற பதிகத்தினைப் பாடியுள்ளார். இவ் இராகத்தின் சிறப்பினை உணர்ந்த புரந்தரதாசர் தென்னிந்திய இசையினை ஆரம்பத்தில் கற்பதற்கு சிறந்த இராகம் இதுவென உணர்ந்து இவ் இராகத்தில் ஆரம்பப் பயிற்சிக்குரிய பாடத்தினை அமைத்துள்ளார். பிற்கால இசைப் புலவர்கள் இவ் இராகத்தில் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளனர். அந்தவகையில் முத்துத்தாண்டவரின் ஆடிக்கொண்டார் - (ஆதி) என்ற பாடல், நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் வரும் சிவலோக நாதனைக் கண்டு – (ரூபகம்) போன்ற தமிழிசைப் பாடல்கள் சிறப்பானவை. அவ்வாறே திரையிசையிலும் ஆலயமணி திரைப்படத்தில் வந்த கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா, ஒருதலை இராகத்தில் வந்த கடவுள் வாழும் கோவிலிலே இவை போன்ற ஏராளமான பாடல்கள் காணப்படுகின்றது. இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட

இந்தப் பண்ணினை முதன் முதலில் கையாண்டு அறிமுகப்படுத்திய பெருமை அம்மையாரையே சாரும்.

**பதிகமுறைப் பாடல்கள்.**

பொதுவாகப் பத்துப் பாடல்கள் கொண்ட தொகுதியினை பதிகம் என்றழைப்பது மரபாகும். ஒரு பதிகத்திலுள்ள முதற்பாடல் எவ்வாறு பாடப்படுகின்றதோ அதே இசையமைப்பில் பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களையும் பாடுவது மரபு. அவ்வாறே பாடல்; ஒன்றின் முற்பகுதியின் அமைப்பிலேயே அதன் பிற்பகுதியினை பாடுவதும் முறையாகும். இந்த அடிப்படையில் சங்க இலக்கியங்களான பதிற்றுப்பத்து, ஐங்குறு நூறு போன்றன பதிகவடிவில் தொகுக்கப்பட்டாலும் கூட பாடல் வடிவில் பதிகங்களை முதன் முதலில் அமைத்தவர் காரைக்கால் அம்மையாராவர். இவர் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தினைப் பின்பற்றியே சம்மந்தரும், அப்பரும், சுந்தரரும், பதிகங்களைப் பாடியுள்ளனர். இதே இசைப்பாடல் வகையினை மாணிக்கவாசகரும் பாடியுள்ளார் என்பதனை திருவாசகத்திலுள்ள கோவிற் திருப்பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், அச்சோப் பதிகம் போன்ற பாடற் பகுதிகளிலிருந்து அறியலாம். பத்துப் பாடல்களால் தெய்வத்தை இசை கொண்டு பாடும் பதிக முறையினைத் திருப்பாசுரம் பாடிய ஆழ்வார்களும் கடைப்பிடித்தனர் என்பதை “மாலை பத்தும் பண்ணின்பம் வரப் பாடும் பக்தர்......” (3.1.10) என்னும் பெரியாழ்வார் குறிப்பிலிருந்து தெளியலாம்.9

நாயன்மார்கள், ஆழ்வார்கள் மட்டுமல்லாது அவர்;கள் வளப்படுத்தி நெறிப்படுத்திய பண்ணிசை மரபானது பிற்காலத்தில் கர்நாடக சங்கீதம் என அழைக்கப்பட்டபோது அதில் கீர்த்தனை மிகவும் சிறப்புப் பெற்றதாக அமைந்தது. இதில் பல்லவி, அனுபல்லவி மற்றும் சரணம் அமைக்கப்பட்டிருக்கும். ஆயினும் சரணம் என்னும் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் காணப்படும். இவை பதிகப் பாடல் மரபினைப் பின்பற்றியதாகும். கீர்த்தனங்களிலும் பல்லவி, அனுபல்லவியின் மெட்டமைப்பினைப் போலவே சரணப்பகுதி அமைக்கப்பட்டிருப்பது முறையாகும். இந்த மரபினைப் பின்பற்றியே தமிழிசை மூவராகிய முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை மற்றும் அருணாசலக் கவிராயர் போன்றவர்களும் திருவாரூர் மூவர்களும் பாடல்களைப் பாடினார்கள். இதன் காரணமாகவே தென்னிந்திய இசை இன்று உலக இசைகளுக்கெல்லாம் தாயிசையாகத் திகழ்கின்றது. அந்த வகையில் இத்தகைய நீண்டதோர் இசை மரபிற்கு வித்திட்டவர் அம்மையார் என்பது தெளிவாகின்றது.

**தாளத்துடன் அமைந்த பாடல்.**

தென்னிந்திய இசையில் அதிலும் குறிப்பாக திருமுறை இசை மரபில் சுத்தாங்கமாகப் (தாளம் இல்லாது) விருத்தம் பாடுவதும், தாளாங்கமாகப் (தாளத்துடன்) பாடுவதும் மரபாக உள்ளது. அந்த வகையில் காரைக்கால் சிவன் கோவிலில் உள்ள அம்மையாரின் திருவுருவச் சிலை கையில் தாளத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தாளத்துடன் பதிகங்களைப் அம்மையார் பாடியிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது. இவரைப் பின்பற்றியே திருஞான சம்மந்தரும் ஏனையவர்களும் பதிகங்களை தாளாங்கமாகப் பாடியுள்ளனர் என்பது தெளிவாகின்றது. அதிலும் குறிப்பாகத் திருஞான சம்மந்தர் கையில் பொற்றாளம் இருந்தமையும் அவர் அதனை உபயோகப்படுத்தியே பாடல்களைப் பாடினார் என்பதற்கு அவரின் கையில் உள்ள தாளமே சான்றாகும்.

**பாடலில் முத்திரை.**

தென்னிந்திய இசை மரபில் பாடல்களுக்கு அடையாளம் குறிப்பிடப்படுவது ஓர் வளமையாக உள்ளது. இந்த முத்திரைகள் பல வகைப்படும். இந்த மரபினை

ஆரம்பித்துவைத்த பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும். காரைக்கால் அம்மையார் தனது பதிகங்களில் “காரைக்கால் பேய்” என்பதைக் குறிப்பிட்டு அதனை அடையாளமாகக் கொண்டுள்ளார். இவரைப் பின்பற்றியே சமய குரவர்களும், பிற்காலப் பாடலாசிரியர்களும் முத்திரைகளைத் தமது படைப்புக்களில் பதிந்துள்ளனர். சான்றாக சுந்தர மூர்த்திசுவாமிகள் தனது முதல் பதிகமாகிய “பித்தாப் பிறைசூடி......” என்ற பாடலில் வெண்ணை நல்லூருறையும் என்று “திருவெண்ணை நல்லூர்” என்ற தல முத்திரையைப் பதித்துள்ளார்.

ஆயினும் வடமொழி நூலாசிரியராகிய பேராசிரியர் சாம்பமூர்த்தி போன்றவர்கள் இவற்றினை சுட்டாது தியாகராசர் போன்றவர்களே முத்திரையை முதலில் பதித்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் பாடல்களில் அடையாளம் என்கின்ற முத்திரையை முதன் முதலில்; பயன்படுத்தியவர் காரைக்கால் அம்மையார் என்றால் மறுப்பதற்கில்லை.

**அந்தாதி முறை.**

தமிழில் அந்தாதி என்கின்ற படைப்பினை அறிமுகம் செய்தவர் காரைக்கால் அம்மையாராவர். அவர் பாடிய அற்புதத்திருவந்தாதி தமிழிலக்கிய வரலாற்றில் ஓர் புதிய படைப்பாக அமைந்தது. இவரைப் பின்பற்றியே பிற்காலப் புலவர்கள் அந்தாதிகளைப் படைத்தனர். சான்றாக அபிராமிப்பட்டர் பாடிய அபிராமி அந்தாதி தற்காலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அபிராமிப்பட்டர் போன்றவர்கள் அம்மையாரின் வழியினைப் பின்பற்றி அந்தாதியினைப் பாடியதால் தமிழ் கூறும் நல்லுலகில் அந்தாதி ஓர் புதிய படைப்பாக இன்றுவரை உள்ளது.

**தொகுப்புரை முடிவுகள்.**

முத்தமிழின் நடுநாயகமாகத் திகழும் இசைத்தமிழின் வளர்ச்சிக்கு தொன்று தொட்டு இன்று வரை ஏராளமான இசைப்புலவர்கள் தமது பங்களிப்பினைச் செய்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாக இருக்கின்ற அதேசமயம் ஒருசில பெண் புலவர்களும் தமது பணியினைச் சிறப்பாகச் செய்துள்ளனர். அவர்களில் குறிப்பிடும் படியாக அமைந்தவர் தமிழிசையின் தாய் என்று போற்றப்படுகின்ற காரைக்கால் அம்மையாராவர். இவர் தென்னிந்திய இசை வரலாற்றில் என்றும் தவிர்க்க முடியாத ஓர் இடத்தினைப் பெற்றுள்ளார். அவ்வாறு அவர் போற்றப்படுவதற்குரிய காரணங்களாகப் பல கூறப்பட்டாலும் அம்மையார் பாடிய பண்கள், தாளங்கள் போன்றவை இசைச் சிறப்புக்களாக இருக்கின்ற அதே சமயம் பாடல் அமைப்பு, முத்திரை, அந்தாதி முறை போன்ற இயல் சிறப்புக்களாலுமாகும். இவற்றின் மூலமாக பல சிறந்த படைப்புக்களைப் படைத்து தென்னிந்திய இசை புதிய ஓர் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார்கள் என்றே கூற வேண்டும். இவரின் படைப்புக்களைப் பின்பற்றியே சமய குருவர்களும், ஆழ்வார்களும், பிற்கால படைப்பாளிகள் முதல் தற்காலப் படைப்பாளிகள் வரை தமது படைப்புக்களைப் படைத்துள்ளனர். ஆயினும் தேவார திருவாசகங்களோ அல்லது பாசுரங்களோ பிரபலம் அடைந்த அளவிற்கு அம்மையாரின் பாடல்கள் பிரபலமடையவில்லை என்றே கூறவேண்டும். எனவே இவற்றினைக் கருத்தில் கொண்டு அம்மையாரின் பாடல்களை வெளிப்படுத்த தமிழிசை பாடகர்கள் முன்வரவேண்டும்;. அவ்வாறே அம்மையாரின் இயல் சிறப்புக்களை ஆராய ஆய்வாளர்கள் முன்வர வேண்டும். அவ்வாறு செய்கின்ற போது அம்மையாரின் படைப்புக்கள் மேலும் வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்பெண் சான்று.**

1. பக்கிரிசாமிபாரதி.கே.ஏ - இந்திய இசைக்கருவூலம், 2004, குசேலர்; பதிப்பகம், சென்னை. பக்.எண்.522.
2. சேக்கிழார், பெரிய புராணம், கரைக்கால் அம்மையார் புராணம், பாடல் 60.
3. ஞானா குலேந்திரன், தெய்வத் தமிழிசை, கொழும்பு சிவத்திரு மன்றம், 2008,பக். எண்: 3.
4. பக்கிரிசாமிபாரதி.கே.ஏ - இந்திய இசைக்கருவூலம், 2004, குசேலர்; பதிப்பகம், சென்னை. பக்.எண்.523.
5. தனபாண்டியன். து. ஆ, இசைத்தமிழ் வரலாறு, பக். எண் 35.
6. சுந்தரம்.வி. ப. கா, தமிழிசையியல், பக். எண் 104.
7. ஞானா குலேந்திரன், தெய்வத் தமிழிசை, கொழும்பு சிவத்திரு மன்றம், 2008, பக். எண்: 3.
8. பக்கிரிசாமிபாரதி.கே.ஏ - இந்திய இசைக்கருவூலம், 2004, குசேலர்; பதிப்பகம், சென்னை. பக்.எண்.523.
9. ஞானா குலேந்திரன், தெய்வத் தமிழிசை, கொழும்பு சிவத்திரு மன்றம், 2008, பக். எண்: 5.

**துணைநூற் பட்டியல்.**


1. சுந்தரம்.வி. ப. கா, தமிழிசையியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1994.
2. சேக்கிழார், பெரிய புராணம், கரைக்கால் அம்மையார் புராணம்,
3. ஞானா குலேந்திரன், தெய்வத் தமிழிசை, கொழும்பு சிவத்திரு மன்றம், 2008,
4. தனபாண்டியன். து. ஆ, இசைத்தமிழ் வரலாறு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், 1994.
5. பக்கிரிசாமிபாரதி.கே.ஏ - இந்திய இசைக்கருவூலம், குசேலர்; பதிப்பகம், சென்னை, 2004,